





கழக அயலக அணியின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம், சேலம் போஸ் மைதானத்தில் 08.07.2025 அன்று மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, கழக அயலக அணித் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை வகித்தார். தமிழ்நாடு முழுவதிலு மிருந்து திரண்டு வந்திருந்த அயலக அணி நிர்வாகிகளிடையே, கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா ஆலோசனைகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். நிகழ்ச்சியில் கழக அணியின் இணை துணைச் செயலாளர்கள் டாக்டர்.செந்தில்குமார், வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன் ராமகிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல் ராமசாமி, சேகர் ஜே.மனோகரன், குமரி ஏ.பாபு வினிபிரட் ஆகியோர் கலந்துகொண்டனர்.






கழக அயலக அணியின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம், சேலம் போஸ் மைதானத்தில் 08.07.2025 அன்று மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, கழக அயலக அணித் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை வகித்தார். தமிழ்நாடு முழுவதிலுமிருந்து திரண்டு வந்திருந்த அயலக அணி நிர்வாகிகளிடையே, கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா ஆலோசனைகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். நிகழ்ச்சியில் கழக அணியின் இணை துணைச் செயலாளர்கள் டாக்டர். செந்தில் குமார், வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, திருமதி.எஸ்.உமாராணி எம்.சி, விஜயன் ராமகிருஷ்ணன் எம்.சி, வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி, முத்துவேல் ராமசாமி, சேகர்.ஜே.மனோகரன், குமரி ஏ.பாபு வினிபிரட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### சேலத்தில் - கழக அயலக அணி மாநில - மாவட்ட அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில் தீர்மானம்!

# திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய அயலக அணி சூளுரை!

## திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை! எம்.எம்.அப்துல்லா எம்.பி.- கலாநிதி வீராசாமி எம்.பி. - அமைச்சர் இரா. இராஜேந்திரன் - எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி. பங்கேற்பு!

சேலம், ஜூலை 13-

கழக அயலக அணியின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம், சேலம் போஸ் மைதானத்தில் 08.07.2025 அன்று மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, கழக அயலக அணித் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை வகித்தார்.

தமிழ்நாடு முழுவதிலுமிருந்து திரண்டு வந்திருந்த அயலக அணி நிர்வாகிகளிடையே, கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா ஆலோசனைகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். நிகழ்ச்சியில் பேசிய கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, 2026 சட்டமன்றத் தேர்தலின் முக்கியத்துவம் குறித்தும், தமிழ்நாட்டு மக்களை ஓரணியில் இணைக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னெடுப்பை சிறப்பான முறையில் செயல்படுத்தி கழகத்தின் மகத்தான வெற்றிக்கு வழிவகுக்க வேண்டும் என்பது குறித்தும் உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர், சேலம் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி ஆகியோரும் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில், 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் மகத்தான வெற்றிக்கு கழக அயலக அணி நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கழக அணியின் இணை துணைச் செயலாளர்கள் டாக்டர்.செந்தில் குமார், வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, திருமதி.எஸ்.உமாராணி எம்.சி, விஜயன் ராமகிருஷ்ணன் எம்.சி, வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி, முத்துவேல் ராமசாமி, திரு.சேகர்.ஜே. மனோகரன், குமரி ஏ.பாபு வினிபிரட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், மாநில உரிமைகளை வலியுறுத்தியும், ஒன்றிய அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்தும், அயலகத் தமிழர் நலன் காக்கவும் பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

(கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முழு விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

கழக அயலக அணி மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டத்தின் தீர்மானங்கள்

கழகத்தின் வளர்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணித்து, சமீபத்தில் மறைந்த கழகத்தின் மூத்த முன்னோடிகள், இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் மற்றும் உடன்பிறப்புகள் அனைவருக்கும் கழக அயலக அணி தனது வீர வணக்கத்தைச் செலுத்துவதோடு, அவர்களின் கொள்கைப் பயணத்தைத் தொடரவும் உறுதியேற்கிறது.

அண்மையில் அகமதாபாத்தில் நிகழ்ந்த கோரமான விமான விபத்திலும், காஷ்மீரின் பகல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய கோழைத்தனமான தாக்குதலிலும் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களின் மறைவிற்கு, உலகத் தமிழர்களின் சார்பில் கழக அயலக அணி தனது ஆழ்ந்த இரங்கலையும், கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களது குடும்பத்தினரின் துயரத்தில் அயலக அணி முழுமையாகப் பங்கெடுக்கிறது. இந்த இரண்டு சம்பவங்கள் மீதும் முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்ப வங்கள் நடைபெறாமல் தடுக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

வீடு வீடாகச் சென்று அரசின் திட்டங்களையும், உரிமைப் போராட்டங்களையும் எடுத்துக்கூறி, தமிழ்நாட்டின் மண்மொழிமானம் காக்க, வாக்காளர்களை ‘ஓரணியில் தமிழ்நாடு’ என ஒன்றிணைக்கும் தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிகு முன்னெடுப்பை கழக அயலக அணி பெருமகிழ்ச்சியுடன் போற்றி வணங்குகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வென்று கழகம் வரலாறு படைக்க, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய, கழக அயலக அணி சூளுரைக்கிறது.

**தீவிர பரப்புரை**

ஏழாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்திட, தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் அவர்கள் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிட, கழக அயலக அணியின் சார்பில் நிர்வாகிகள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, கள ஆய்வுகள் செய்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி, பொதுக்கூட்டங்களை நடத்தி, தீவிர பரப்புரைகளை மேற்கொண்டு, கழகத்துக்கு ஆதரவு திரட்டுவோம் என கழக அயலக அணி உறுதியளிக்கிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் மக்கள் நலனுக்கான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, 2018ல் கழகத் தலைவராக பொறுப்பேற்றது முதல் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் தொடர்ந்து வெற்றி நாயகனாகத் திகழும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு கழக அயலக அணி மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றது.

மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் நியமன முறையில் இடஒதுக்கீடு வழங்கி, அவர்களை உள்ளாட்சிப் பிரதிநிதிகளாக உயர்த்தியதற்கும், கழகத்தில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மற்றும் நலன்களில் கவனம் செலுத்துவதற்காக மாற்றுத்திறனாளிகள் அணி மற்றும் ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களை உள்ளடக்கிய கல்வியாளர் அணி ஆகிய இரு புதிய அணிகளை உருவாக்கியதற்கும்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கழக அயலக அணி மனமார்ந்த நன்றியையும், பெருமகிழ்ச்சியுடன் வரவேற்பையும் தெரிவித்துக் கொள்கிறது.

கழக இளைஞரணி செயலாளராகப் பொறுப்பேற்று 6 ஆண்டுகளை நிறைவு செய்து, லட்சக்கணக்கான இளைஞர்களைக் கழகத்தில் இணைத்தது, விளையாட்டுத்துறை அமைச்சராக செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நாடே வியக்கும் வண்ணம் சிறப்பாக... நடத்தியது, ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டிகளை சிறப்பாக நடத்தியதன் மூலம் ஜூனியர் உலகக்கோப்பை போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு உலக ஹாக்கி கூட்டமைப்பின் அங்கீகாரத்தைப் பெற்றது, விளையாட்டு வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வேலைவாய்ப்பில் 3% இடஒதுக்கீடு அளித்து, அதன் மூலம் 200க்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தந்தது, ‘கேலோ இந்தியா’ போட்டிகளை வரலாற்றுச் சிறப்புமிக்க முறையில் நடத்திக் காட்டியது, மாற்றுத்திறனாளிகளை ஊக்குவித்து உலகெங்கும் நடைபெறும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்க அவர்களை அனுப்பி வைத்து, அவர்களுக்கான புதிய வாழ்வாதாரத்தை உருவாக்கியது, விளையாட்டுத்துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றியது, தற்போது தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராகத் தொடர் மக்கள் பணியாற்றுவது என அயராது உழைக்கும் கழகத்தின் எதிர்கால நம்பிக்கை, இளைஞர்களின் எழுச்சி நாயகன், இளம் தலைவர் அவர்களுக்கு கழக அயலக அணி தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. கழகத்தின் முதன்மை அணியான இளைஞரணியுடன் அயலக அணி எப்போதும் தோளோடு தோள் நின்று, இணைந்து பயணிக்கும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை செம்மொழி நாளாக அறிவித்ததற்கு தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவிப்பதுடன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளை இந்தியா முழுவதும் செம்மொழி நாளாகக் கொண்டாட வேண்டும் என்கிற வலியுறுத்தலை கழக அயலக அணி வழிமொழிகின்றது.

**பா.ஜ.க.வின் சதி**

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னகத்தின் குரலை நெரிக்கும் பாஜகவின் சதியை எதிர்த்து, பல்வேறு மாநில முதலமைச்சர்களையும் கட்சித் தலைவர்களையும் ஒருங்கிணைத்து, இந்தியாவிற்கே வழிகாட்டிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உறுதியான நிலைப்பாட்டை கழக அயலக அணி வரவேற்கிறது.

செப்டம்பர் மாதம் நடைபெறும் கழக முப்பெரும் விழா வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் வீரியமாகவும், எழுச்சியோடும் நடைபெறுவதற்கு கழக அயலக அணி அனைத்து பணிகளையும் மேற்கொண்டு துணை நிற்கும் என உறுதியளிக்கிறது.

கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டுத்துறை அமைச்சர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் அவர்களின் பிறந்தநாளான நவம்பர் 27 ஆம் நாளை மனித நேய உதய நாளாக எழுச்சியுடன் கொண்டாடுவோம் என முடிவு செய்யப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வள்ளுவருக்கு வானுயர் சிலை அமைத்த கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குளச்சல் பகுதியில், கழக இளைஞரணியின் வழியில், கலைஞர் நூலகம் கட்டி, மக்களை அறிவுப் பாதையில் செலுத்துவதற்கு கழக அயலக அணி பங்களிக்கும் என உறுதியளிக்கிறது.

“வேர்களைத் தேடி” (*Reaching Your Roots*) எனும் பண்பாட்டுப் பயணத்திட்டத்தின் மூலம், அயலகத்தில் வாழும் இளைய தலைமுறையினரைத் தமிழ்நாட்டுடன் பிணைக்கும் மகத்தான பணியைத் தொடர்ந்து செய்துவரும், தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நலத்துறைக்கு கழக அயலக அணி தனது வரவேற்பினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய நிதியைத் தொடர்ந்து வழங்க மறுப்பதோடு, சமக்ர சிக்ஷா திட்டத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஒரே காரணத்துக்காக, பள்ளி மாணவர்களுக்கான கல்வி நிதியை விடுவிக்காமல் மாணவர்களின் எதிர்காலத்தோடு விளையாடும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு கழக அயலக அணி கண்டனம் தெரிவிக்கின்றது.

ஒன்றிய பா.ஜ.க. அரசு ஆதிக்க மனப்பான்மையுடன் இந்தித் திணிப்பை செயல்படுத்த நினைப்பதற்கு கழக அயலக அணி கண்டனம் தெரிவிக்கின்றது.

கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கே கொண்டுவர வேண்டும் என ஒன்றிய பா.ஜ.க. அரசை கழக அயலக அணி வலியுறுத்துகின்றது.

நீட் தேர்வில் தேசிய அளவில் நடைபெற்ற முறைகேடுகளுக்கும், ஊழலுக்கும், லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கிய தேசியத் தேர்வுகள் முகமைக்கும் (NTA), ஒன்றிய பாஜக அரசுக்கும் கழக அயலக அணி தனது கடும் கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்களிக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்துகிறது.

முருகன் மாநாடு எனும் பெயரில் மதவெறி மாநாட்டை நடத்தி, அதில் ஆன்மிகம் பேசாமல் மதக்கலவரத்தை உருவாக்கும் வகையில் பேசி, தீர்மானங்கள் போட்டு, தந்தை பெரியாரையும் பேரறிஞர் அண்ணாவையும் இழிவுபடுத்திய இந்து முன்னணி மற்றும் பாஜகவுக்கும், இப்படியொரு நிகழ்வில் கலந்துகொண்டு, பெரியாரையும் அண்ணாவையும் இழிவுபடுத்துவதை கைகட்டி வாய்பொத்தி வேடிக்கை பார்த்த அடிமை அதிமுகவுக்கும் கழக அயலக அணி தனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

**கீழடி ஆய்வுகள் முடக்கம்**

சிந்து சமவெளிக்கு இணையான தமிழர் நாகரிகத்தின் தொன்மையை உலகுக்கு உணர்த்தும் கீழடி ஆய்வுகளை முடக்கும் நோக்கிலும், அதன் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையிலும் செயல்படும் ஒன்றிய தொல்லியல்துறை மற்றும் பா.ஜ.க. அரசிற்கு கழக அயலக அணி தனது கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் வகையிலும், எதிர்க்கட்சித் தலைவர்களைப் பழிவாங்கும் நோக்கிலும், சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற தன்னாட்சி அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் எதேச்சதிகாரப் போக்கிற்கு கழக அயலக அணி தனது கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறது.

உலகின் தொன்மைமிகு மொழிகளில் ஒன்றான, செம்மொழித் தகுதி பெற்ற தமிழை, இந்தியக் குடியரசின் அலுவல் மொழிகளில் ஒன்றாக அறிவிக்க, காலம் தாழ்த்தாமல் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கழக அயலக அணி வலியுறுத்துகிறது.

ஈரான் போன்ற போர்ச் சூழல் நிலவும் நாடுகளில், வாழ்வாதாரத்திற்காகச் சென்று சிக்கித் தவிக்கும் அப்பாவித் தமிழக மீனவர்களைப் பாதுகாப்பாகத் தாயகம் மீட்க, ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சகம் சிறப்புப் பணிக்குழு ஒன்றை அமைத்து, உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கழக அயலக அணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இந்தியாவின் பன்முகத் தன்மையின் அடையாளமாக விளங்கும் “வேற்றுமையில் ஒற்றுமை” என்ற கொள்கைக்கு எதிராக, “ஒரே நாடு, ஒரே தேர்தல்”, “ஒரே மொழி”, “பொது சிவில் சட்டம்” போன்ற திட்டங்களைத் திணிக்கும் முயற்சிகளை ஒன்றிய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என கழக அயலக அணி வலியுறுத்துகிறது.

திராவிட இயக்கம் போராடிப் பெற்ற சமூகநீதியை நாடு முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், தனியார் துறையிலும் இடஒதுக்கீட்டை அமல்படுத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும் என கழக அயலக அணி வலியுறுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## தி.மு.க. விவசாய அணி

### தஞ்சை மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் நியமனம்

**விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு**

**கழகத்தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் தஞ்சை மத்திய மாவட்டம் -தஞ்சை மாநகரஅமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தஞ்சை மத்திய மாவட்டம்**

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - க. வினோத் மேலராஜவீதி, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) நா. அமிர்தராஜ் சுபேதார் தெரு, எம். சாவடி, தஞ்சாவூர். 2) ரா. வசந்த் வெட்டுக்காரத் தெரு, தஞ்சாவூர். 3) மு. கதிரேசன் கவர்காரத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். 4) பா. சுந்தர் முல்லை நகர், மானோஜிப்பட்டி சாலை, தஞ்சாவூர். 5) பி. ஜெயபிரகாஷ் பெரிய தெரு, சுங்காந்திடல், கரந்தை, தஞ்சாவூர்.

**“அண்ணாஅறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 11-07-2025

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

---

## தி.மு.க. அயலக அணி

### காஞ்சிபுரம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, எம்.பி., அறிவிப்பு**

**கழகத்தலைவர்** அவர்களின்ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **காஞ்சிபுரம்** மாநகர தி.மு.க. அயலக அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**காஞ்சிபுரம் மாநகரம்**

அமைப்பாளர் - ஜி. தனசேகரன் 25, பாலசுந்தரம் தெரு, வேளிங்கபட்டறை, காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வி. டில்லிபாபு 942எ, ஏ.கே.டி.எஸ். மணி தெரு, காஞ்சிபுரம். 2) கே. ரசூல் 15எ/12, பெருமாள் தெரு, காஞ்சிபுரம். 3) சி. சுரேஷ் 201, அன்னை சத்யா நகர், காஞ்சிபுரம். 4) பி. சுரேஷ்குமார் 9, விளக்கடி கோயில் தோப்பு தெரு, காஞ்சிபுரம்.

**“அண்ணாஅறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 11-07-2025

**எம்.எம்.அப்துல்லா, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க.அயலகஅணி.

---



ஓரணியில் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க, குன்னூர் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி தலைமையில் மண், மொழி, மானம் காத்திட, “ஓரணியில் தமிழ்நாடு” வீடு வீடாகச் சென்று உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக் பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் குன்னூர் நகர மன்ற துணைத் தலைவர் வாஷிம் ராஜா, கிளைக் கழக செயலாளர் எம்.ஏ. ரஹீம், நகர மன்ற உறுப்பினர் மணிகண்டன் திருமதி.பரிமளா வசந்தகுமார், வடிவேல் ரவி, ராதா, வேணி, நித்திஷ் குமார் மற்றும் அப்பகுதியில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.